## ஏல விற்பனை நிபந்தனைகள்

1. மூடி முத்திரையிட்ட ஏல விற்பனை படிவங்கள் மேற்படி அலுவலகத்திற்கு பதிவு அஞ்சல் மூலம் 12.07.2022 அன்று கிடைக்கப் பெற வேண்டும்.
2. 14.07.2022 அன்று மாலை 3.30 மணிக்கு வருகைப் புரிந்துள்ள டெண்டர்தாரர்கள் முன்னிலையில் மாவட்ட நூலக அலுவலர் அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகளின் உறை திறக்கப்படும்.
3. வாகனத்தை பார்வையிட விரும்புவோர் இவ்வலுவலக வேலை நாட்களில் (சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்கள் தவிர்த்து) காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பார்வையிடலாம்.
4. மூடி முத்திரையிட்ட ஏல விற்பனை படிவங்களுடன், படிவத்திற்கான கட்டணம் ஒரு படிவத்திற்கு ரூ.105/– வீதமும் மற்றும் ஏல விற்பனை காப்புத் தொகை ஒரு வாகனத்திற்கு ரூ.2,000/– வீதமும் கணக்கீடு செய்து **District Library Officer, Chennai"** என்ற பெயரில் வங்கி வரைவோலை (Demand Draft) இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
5. ஏல விற்பனை படிவத்திற்கான கட்டணத்திற்கும் மற்றும் ஏல விற்பனை காப்புத் தொகைக்கான கட்டணத்திற்குமான வரைவோலை இணைக்கப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும்.
6. ஏல விற்பனையில் தேர்ந்தெடுக்கப்படுவோர் உத்தரவு வழங்கப்பட்டு வரிகளுடன் கூடிய தொகை முழுவதும் 15 தினங்களுக்குள் செலுத்த வேண்டும்.
7. அவ்வாறு தவறும் பட்சத்தில் ஏல விற்பனை நிராகரிக்க மாவட்ட நூலக அலுவலருக்கு முழு அதிகாரம் உள்ளது. மேலும் ஏல விற்பனை காப்புத் தொகை திரும்ப வழங்கப்படமாட்டது.

8. ஏல விற்பனை தேதியினை மாற்றம் செய்ய மாவட்ட நூலக அலுவலருக்கு முழு அதிகாரம் உள்ளது.
9. ஏல விற்பனை படிவத்தில் அடித்தல், திருத்தம் இன்றி தொகையினை எண்ணாலும், எழுத்தாலும் தெளிவாக குறிப்பிட வேண்டும். அடித்தல், திருத்தம் உள்ள படிவங்கள் நிராகரிக்கப்படும்.
10. ஏலம் எடுப்போர் ஏலத்தில் எவ்விதமான நிபந்தனைகளையும் குறிப்பிடக் கூடாது, நிபந்தனைகளுடன் வரப்பெற்றால் ஏலம் ஏற்றுக் கொள்ளப்படாது.
11. ஏலத்தில் ஏதேனும் ஒன்றினையோ அல்லது அனைத்து ஏலப்படிவங்களையும் எந்தவித காரணங்கள் காட்டாமல் ஏற்கவோ, அல்லது நிராகரிக்கவோ மாவட்ட நூலக அலுவலருக்கு முழு அதிகாரம் உள்ளது.
12. இந்த ஏல விற்பனை தொடர்பாக அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட நூலக அலுவலர் எடுக்கும் முடிவே இறுதியானது.
13. ஏல விற்பனை படிவங்களின் ஆய்வு முடிந்தப்பின் அதிக தொகைக்கு கோரியுள்ள ஏலதாரருக்கு முறைப்படி விற்பனை செய்வதற்கு உத்தரவு வழங்கப்படும்.
14. ஏல விற்பனையில் தேர்வு செய்யப்பட்ட ஏலதாரர் மேற்காணும் விவரப்படி செலுத்த முடியாத பட்சத்தில் ஏலகாப்புத் தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது. இந்நிலையில் மறுவிலைப்புள்ளி கோருவதுடன் இதனால் ஏற்படும் இழப்புகளையும் ஏல விற்பனையில் தேர்வு செய்யப்பட்ட ஏலதாரரிடமே வசூல் செய்யப்படும்.